2

1

<u>மாமன்ற கூட்டப்பொருள்</u>

வேலூர் மாநகராட்சி 2024–2025 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு மற்றும் 2025–2026 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**மாமன்றம் உரிய அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்: <u>01/2025/ பி1</u>**

04/03/25 4/3/2025 A. Sujatha

**கண்காணிப்பாளர்** **கணக்கு அலுவலர்** **உதவி ஆணையர்(க)** **ஆணையர்** **மதிப்பிற்குரிய மேயர்**

வேலூர் மாநகராட்சி மேயர் அவர்களின் மாமன்ற சாதாரணக்/அவசரக் கூட்டம் நாள் : 12-03-25 அன்று நடைபெற்ற

தீர்மானம் எண்: 382

அலுவலக குறிப்பு

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது

(ஒம்) A. சுஜாதா
மேயர்
வேலூர் மாநகராட்சி

/ உண்மை நகல்

14/3/25
கணகாணிப்பாளர்,
வேலூா மாநகராட்சி

14/03/25

கலைஞர் 100
1924 - 2023

# வேலூர் மாநகராட்சி

## பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய
## வரவு செலவுத் திட்டம்

# 2025 - 2026

# VELLORE CITY MUNICIPAL CORPORATION

## REVISED ESTIMATE 2024-2025
## &
## BUDGET ESTIMATE 2025-2026

# 2025 - 2026



# திருக்குறள்

## வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
## கோல்அதூஉம் கோடாது எனின்.

பொருள் :

ஓர் அரசுக்கு வெற்றியைத் தருவது பகைவரை வீழ்த்தும் வேலல்ல குடிமக்களை வாழவைக்கும் வளையாத செங்கோல்தான்.



திருமதி.**ஆ.சுஜாதா** M.A., B.Ed.,
வணக்கத்திற்குரிய மேயர்

## முகவுரை

வேலூர் மாநகராட்சியின் 2025-2026-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வழங்குவதில் மிகுந்த மற்றற்ற மகிழ்ச்சி கொள்கிறோம். இந்த நிதி நிலை அறிக்கை ஆணையாளர் மற்றும் அனைத்து துறை அலுவலர்களுடன் விரிவாக கலந்தாய்வு செய்து அனைத்து தரப்பு பொது மக்கள் பயன்பெறும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மாநகர மக்களின் அடிப்படை தேவைகளான சாலை வசதி, குடிநீர் வசதி, வடிகால்வாய் வசதி, தெரு மின் விளக்கு வசதி, மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளின் கல்வி தரத்தினை மேம்படுத்தும் விதத்தில் பண்ணிரெண்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு முதல் மூன்று இடத்தினை பிடிக்கும் மாணவ/மாணவியருக்கு ஊக்க தொகைகள் வழங்கவும், சீர்மிகு பலகை (Smart Board) வைக்கவும், மாநகர பகுதிகளில் அனைத்து தரப்பு பொது மக்கள் பயன்பெறும் விதத்தில் பூங்காக்களை மேம்படுத்துதல், பொது மக்கள் அனைவரும் பயன்படுத்தும் விதத்தில் விரிவான வரவு செலவு திட்டமாக இந்நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி வருவாய் வரவினை அதிகரித்து ஈட்டுதலை பெருக்கி, நியாயமான செலவினங்களை பகுத்தறியவும் கொள்கைகளை பிரதிபலிக்கும் தன்மைகளை உள்ளடக்கியதாக இந்நிதி நிலை அறிக்கையினை வழங்க பெருமுயற்சி செய்துள்ளோம்.

இந்நிதி நிலை அறிக்கையில் கடந்த ஆண்டு செயல்படுத்திய திட்டங்களை விட நடப்பாண்டில் அதிக அளவில் திட்டங்களை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி நிலை அறிக்கையில் கடந்த ஆண்டு செயல்படுத்திய திட்டங்களையும் நடப்பாண்டில் செயல்படுத்த உள்ள திட்டங்களையும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

# வேலூர் மாநகராட்சி

## பட்ஜெட் 2025-26

| | | | |
|---|---|---|---|
| 1. | வேலூர் மாநகராட்சியின் பரப்பளவு | : | 87.915 ச.கி.மீ |
| 2. | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி | : | 504079 |
| 3. | தற்போதைய மக்கள் தொகை (தோராயமாக) | : | 604933 |
| 4. | மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | : | 60 |
| 5. | மொத்த சொத்து வரிவிதிப்புகள் | : | 117821 |
| 6. | மொத்த குடிநீர் இணைப்புகள் | : | 64132 |
| 7. | மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் | : | 891.92 கி.மீ |
| 8. | தார்சாலை | : | 338.73 கி.மீ |
| 9. | சிமெண்ட் சாலை | : | 336.77 கி.மீ |
| 10. | பேவர் பிளாக் | : | 1.083 கி.மீ |
| 11. | மண்சாலை | : | 215.34 கி.மீ |
| 12. | மொத்த மழைநீர் வடிகால்களின் நீளம் | : | 726.63 கி.மீ |
| 13. | மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை | : | 28600 |
| 14. | பேருந்து நிலையங்கள் | : | 2 |
| 15. | மாநகராட்சி பள்ளிகள் | : | 103 |

### குடிநீர் விநியோகம்:

வேலூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி 55 எம்.எல்.டி குடிநீரும், உள்ளூர் நீர் ஆதாரம் மூலம் 17.4 எம்.எல்.டி மற்றும் உள்ளூர் ஆழ்துளைக் குழாய் கிணறுகளின் மூலம் 3.77 எம்.எல்.டி குடிநீரும் ஆக மொத்தம்

76.17 எம்.எல்.டி குடிநீர் பெறப்பட்டு தினசரி 2 வார்டுகளிலும், 2 நாட்களுக்கு ஒரு முறை 5 வார்டுகளிலும், 3 நாட்களுக்கு ஒரு முறை 36 வார்டுகளிலும், 4 நாட்களுக்கு ஒரு முறை 17 வார்டுகளிலும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கும் தலா 126 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாநகரில் நாளது தேதி வரை 64132 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

## மாநகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை குழாய் கிணறு, மினிமோட்டார் பராமரிப்பு மற்றும் குடிநீர் விநியோக குழாய் பராமரிப்பு பணிகள்:

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறு, மினிமோட்டார் பராமரிப்பு மற்றும் குடிநீர் விநியோக குழாய் பராமரிப்பு பழுதினை சரி செய்தல் போன்ற பணிகளை உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகளை ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தெரு விளக்கு பராமரிப்பு

வேலூர் மாநகராட்சி 60 வார்டு பகுதிகளில் மொத்தம் 28600 எண்ணிக்கையில், கீழ்கண்டுள்ளவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | விளக்குகள் விபரங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 15 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 19646 |
| 2. | 40 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 42 |
| 3. | 60 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 2558 |
| 4. | 90 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 4089 |
| 5. | 120 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 1730 |
| 6. | 150 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 435 |
| 7. | 200 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 100 |
| மொத்தம் | | 28600 |

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் 15வது நிதிக்குழு மானியத்தின் கீழ் புதியதாக 3164 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## சட்டமன்ற தொகுதி வளர்ச்சி நிதி 2024-25:

சட்டமன்ற தொகுதி வளர்ச்சி நிதியின் கீழ் வேலூர் மாநகராட்சி பகுதிகளில் சிமெண்ட் சாலை, பயணிகள் நிழற்கூடம், உடற்பயிற்சி கட்டிடம் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள், காரிய மண்டபம், நியாயவிலை கடைகள், ஆழ்துளைக் கிணறு ஆகிய 15 பணிகளுக்கு

மொத்தம் ரூ.143.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

## அம்ருத் திட்டம்:

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பகுதி-I TNUDP III 2008-2015 திட்டத்தின் கீழ் ரூ.40.49 கோடி மதிப்பீட்டில் 48.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடைக் குழாய் அமைத்து 10.28 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது

இரண்டாம் மற்றும் முன்றாம் கட்டத்தின் கீழ் அம்ருத் 2016-17 திட்டத்தின் கீழ் ரூ.690.91 கோடி மதிப்பிட்டில் 4 சிப்பங்களாக பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு TNUIFSL நிறுவனத்தின் மூலமாக ஆசிய உலக வங்கி (ADB) நிதியுதவியுடன் 421 கி.மி நீளமும் 50.00 MLD(STP) கொள்ளளவு கொண்டு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 07.10.2019 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது 401.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடைக் குழாய் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது. நிலுவையில் உள்ள 20 கி.மீ நீளம் உள்ள பாதாள சாக்கடைக் குழாய் பணிகள் மற்றும் 50 MLD சுத்திகரிப்பு நிலையம், இதரப் பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

## அம்ருத் 2.0 திட்டம் :

1. வேலூர் மாநகராட்சி அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் குளங்களை மேம்படுத்தும் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆவாரம்பாளையம் மற்றும் பள்ளிக்குப்பம் குளம் ரூ.2.25 கோடிக்கு பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
2. வேலூர் மாநகராட்சி மண்டலம் 1, அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் 2023-24 ம் நிதியாண்டில் 24X7 குடிநீர் விநியோக செய்வதற்கு முன்மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள Zone 19 அம்மா உணவகம் அருகிலுள்ள 20 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் (Zone 20) EB Colony 10 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து District Metering Areas (DMA) SCADA வசதியுடன் குடிநீர் 24 மணி நேரமும் விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள அரசாணை எண்.148, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள்.22.11.2023ன் படி ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின் திருத்தப்பட்ட அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள்.20.05.2024ன் படி மதிப்பீடு தொகை ரூ.13.69 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அம்ருத் நிதி 2024-25 நிதியாண்டிலிருந்து மேற்கொள்வதற்கு பணியாணை வழங்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

## நமக்கு நாமே திட்டம் 2023-2024:

வேலூர் மாநகராட்சிக்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மானியமாக ரூ.35.73 இலட்சம் மற்றும் பொது மக்களின் பங்களிப்பாக ரூ.17.37 இலட்சம் ஆக மொத்தம் ரூ.53.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நமக்கு நாமே திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் படி மழைநீர் வடிகால் அமைத்தல், சிறுபாலங்கள் அமைத்தல், குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல், கண்காணிப்பு கேமரா(CCTV) அமைத்தல் என மொத்தம் 6 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

## நமக்கு நாமே திட்டம் 2025-26:

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2025-26 ல் இம்மாநகராட்சிக்கு எல்.இ.டி பல்புகள் ரூ.117.01 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவ தீர்மானிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதில் அரசு மானியமாக ரூ.78.01 இலட்சம் மீதமுள்ள ரூ.39.00 இலட்சம் பொது மக்களின் பங்களிப்பாக நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

## 15வது நிதிக்குழு மான்யம் 2022-23:

15வது நிதிக்குழு மான்யம் 2022-23ன் கீழ் ரூ.39.71 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் என 67 பணிகள் எடுக்கப்பட்டு 50 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலை 29 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 20 பணிகள் முடிக்கப்பட்டு 9 பணி நடைபெற்று வருகிறது.

## 15வது நிதிக்குழு மான்யம் 2023-24:

15வது நிதிக்குழு மான்யம் 2023-24ன் கீழ் ரூ.21.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சாலை பணிகள் போன்ற 32 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 23 பணிகள் முடிக்கப்பட்டு 9 பணிகள் நடைபெற்று வருகிறது.

## 15வது நிதிக்குழு மான்யம் 2024-25:

15வது நிதிக்குழு மான்யம் 2024-25 ன் கீழ் ரூ.16.11 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

## தேசிய நகர்புற சுகாதார திட்டம் 2022-23:

தேசிய நகர்புற சுகாதார திட்டம் 2022-2023 கீழ் 28 எண்ணிக்கை புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டுதல் பணி ரூ.12.27 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 25 பணிகள் முடிக்கப்பட்டு 3 பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

## தேசிய நகர்புற சுகாதார திட்டம்:

7 நகர்புற ஆரம்ப சுகாதார மையம் ரூ.660 இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்ட திட்ட மிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

நகர்புற சுகாதார ஆய்வு கூடம் (CPHL) சத்துவாச்சாரியில் கட்டிட மேம்பாட்டிற்காக ரூ.22.00 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

ரூ.60 இலட்சத்தில் இலட்சுமிபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டி முடிக்கும் நிலையில் உள்ளது.

## தூய்மை பாரத திட்டம்:

தூய்மை பாரத திட்டம் (SBM 2.0) திட்டத்தின் கீழ் 3 எண்ணிக்கை நுண்ணுயிர் செயலாக்க மையங்கள் கட்டுதல், 13 எண்ணிக்கை MRF கட்டுதல் மற்றும் 16 எண்ணிக்கை கழிப்பிட கட்டிடம் கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.11.12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 32 பணிகளில் 14 பணிகள் முடிக்கப்பட்டு 18 பணிகள் நடைபெற்று வருகிறது.

# புதிய முன்மொழிவுகள்

## சாலைகள்:

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் உள்ள மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றுதல் பழுதடைந்துள்ள தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை சீரமைத்தல் பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக ரூ.35.00 கோடி மதிப்பீடுகளுக்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## சிமெண்ட் சாலை சீரமைத்தல்:

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 336.77 கி.மீ சிமெண்ட் சாலை உள்ளது. இதில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டத்தினால் 30% சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளது. பாதாள சாக்கடை திட்டம் முடிவுற்ற பகுதிகளில் சாலை செப்பனிடும்

பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி சிமெண்ட் சாலைகளை செப்பனிடும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.25 கோடி ஆகும்.

**தார்சாலை சீரமைத்தல்:**

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 338.73 கி.மீ தார் சாலை உள்ளது. இதில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டத்தினால் 30% சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளது. பாதாள சாக்கடை திட்டம் முடிவுற்ற பகுதிகளில் சாலை செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி சிமெண்ட் சாலைகளை செப்பனிடும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.25 கோடி ஆகும்.

**BIO Mining:**

வேலூர் மாநகராட்சியில் சதுப்பேரி உரக்கிடங்கில் உள்ள 1,01,500 க.மீ கொள்ளளவு கொண்ட குப்பைகளை BIO Mining முறையில் பிரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்த காலத்தில் பணி முடிக்கப்படாததால் ரத்து செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மழைநீர் வடிகால் சீரமைத்தல்:**

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 726.63 கி.மீ மழைநீர் வடிகால் உள்ளது. இம்மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு மேல் ஆகிறது. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்களை சீரமைத்தல் மற்றும் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்தல் பணிகளுக்கு தற்போது தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.9.68 கோடி ஆகும்.

**உள்கட்டமைப்புகள்:**

வேலூர் மாநகராட்சி மண்டலம் -2 நேதாஜி சந்தையினை நவீன சந்தையாக மாற்றி அமைக்க சுமார் ரூ.50 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வரப்படுகிறது.

## சோலார் மின் ஆலை:

வேலூர் மாநகராட்சி மண்டலம் 1 ல் சர்கார் தோப்பு பகுதியில் 3.60 மெகா வாட்ஸ் சோலார் மின் உற்பத்தி ஆலை சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இம்மின் நிலையத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 21.74 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு பெறப்பட்டுள்ள உயர்மின் அழுத்த மின் இணைப்புகளுக்கு ஈடுசெய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ரூ.1.10 கோடிக்கு மின் கட்டணம் சேமிக்கப்பட்டுள்ளது.

# தலைமை நீரேற்றும் நிலையம்

## தலைமை நீரேற்று நிலையம்:

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்ற நிலையம் மற்றும் நீர்உந்து நிலையங்களில் பராமரிப்பு பணி மற்றும் புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.9.68 கோடி மதிப்பீட்டில் 15th CFC – Tied Grant ல் செயல்படுத்த அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## அலுவலர்கள் குடியிருப்பு:

இம்மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.00 கோடி ஆகும்.

## சுற்றுசூழல் பூங்கா (ECO Park):

வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுற்றுசூழல் பூங்கா அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00 கோடி ஆகும்.

ஏரிகள் மேம்பாட்டு பணிகள்:

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட ஒட்டேரி, பலவன்சாத்து மற்றும் வேலவாடி ஏரிகளை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள சுமார் ரூ.94.00 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## CSR Activities:

நிறுவனங்களின் சமூக பொறுப்பு செயல்பாடுகள்

இம்மாநகராட்சியின் சீரிய முயற்சியால் கீழ்கண்ட வங்கிகள் தங்களின் நிறுவன சமூக பொறுப்பு (Corporate Social Responsibility) நடவடிக்கையாக செயல்படுத்தியுள்ள விவரம்:

1. பெடரல் வங்கி:

    1. ரூ.6.2 லட்சம் செலவில் சத்துவாச்சாரி, பொது சுகாதார பரிசோதனை மையத்திற்கு மேஜை, நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளது.
    2. ரூ.4.00 லட்சம் மதிப்புள்ள வாகனத்தில் பொருத்தும் வகையிலான கொசு ஒழிப்பு புகை இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

2. சிட்டி யூனியன் வங்கி:

    1. முதல்வரின் காலை உணவுத்திட்டத்தில் உணவருந்தும் குழந்தைகள் பயன் பெறும் வகையில் ரூ.2.10 லட்சம் மதிப்பில், சமையலுக்கு தேவையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.
    2. தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.40,000/- பெறுமானமுள்ள மழைக்கோட்டுகள் வழங்கப்பட்டுள்ளது.
    3. ரூ.80,000/- பெறுமான 5 எண்ணிக்கையில் பணம் எண்ணும் இயந்திரங்களை இவ்வலுவலக பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.
    4. 5 எண்ணிக்கையில் கணினி இயந்திரங்களும் 5 எண்ணிக்கையில் பிரின்டிங் இயந்திரம் அலுவலக பயன்பாட்டிற்காக வழங்க ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. எச்.டி.எப்.சி வங்கி:**

1. ரூ.37,000/- மதிப்பிலான பிளாஸ்டிக் நாற்காலிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.40,000/- மதிப்பிலான 100 மழைக்கோட்டுகள் மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.
2. ரூ.36,000/- மதிப்பிலான 12 பேர் அமரும் ஸ்டீல் நாற்காலி 4 எண்ணிக்கையில் அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.
3. ரூ.1.10 இலட்சம் மதிப்பிலான 2 எண்ணிக்கை கொசு ஒழிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.
4. ரூ.17,000/- மதிப்பிலான லேசர் பிரின்டிங் இயந்திரம் அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.
5. மின் ஒளி பயன்பாட்டிற்காக 9 எண்ணிக்கையில் 40 வாட்ஸ் எல்.இ.டி பல்புகள் பூங்கா பரமரிப்புக்காகவும் மற்றும் சார்கார் தோப்பு பகுதியில் அமைந்துள்ள சோலார் பேனல் உள்ள இடத்திற்கு அருகில் 8 எண்ணிக்கையிலான எல்.இ.டி பல்புகள் வழங்கப்பட்டுள்ளது

**4. கோடக் மஹிந்திரா வங்கி:**

1. ரூ.19.97 இலட்சம் மதிப்பிலான 850 மீ தூரம் கால்வாயில் குப்பை கொட்டுவதை தடுக்கும் விதமாக வேலி அமைக்கப்பட உள்ளது.

**5. இந்தியன் வங்கி:**

1. ரூ.1.5 இலட்சம் மதிப்பிலான கொசு ஒழிப்பு புகை இயந்திரங்கள் 3 எண்ணிக்கையில் இம்மாநகராட்சி பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5 எண்ணிக்கை கொசு ஒழிப்பு இயந்திரங்கள் வழங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. ரூ.68,000/- மதிப்பிலான 4 எண்ணிக்கை டாட் மேட்ரிக்ஸ் பிரின்டிங் இயந்திரம் அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.

**6. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி:**

1. வள்ளலார் பூங்காவில் ரூ.4.5 லட்சம் மதிப்பிலான உடற்பயிற்சி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

# வேலூர் மாநகராட்சி

## இம்மாநகராட்சியின் 2025-2026 ஆம் ஆண்டுக்கான நிதிவாரியான மொத்த வரவினங்கள் மற்றும் செலவினங்களின் விவரம் பின்வருமாறு

### வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி ஆகிய நிதிகளின் வரவினம் மற்றும் செலவின சுருக்கம்

| விவரம் | வருவாய் நிதி | குடிநீர் வடிகால் நிதி | கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| வருவாய் வரவினம் | 18698.58 | 8086.06 | 955.58 | 27740.22 |
| மூலதன வரவினம் | 33801.20 | 25267.00 | 100.00 | 59168.20 |
| மொத்தம் | 52499.78 | 33353.06 | 1055.58 | 86908.42 |
| வருவாய் செலவினம் | 26175.98 | 8742.64 | 245.53 | 35164.15 |
| மூலதன செலவினம் | 26303.58 | 24577.34 | 704.60 | 51585.52 |
| மொத்தம் | 52479.56 | 33319.98 | 950.13 | 86749.67 |
| உபரி | 20.22 | 33.08 | 105.45 | 158.75 |






## VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2024-2025 AND BUDGET ESTIMATE 2025-2026

## REVENUE FUND & CAPITAL FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-2025 | Budget Estimate 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | **Receipts (Revenue)** | | | **Rs.in Lakhs** | |
| 1 | Tax Revenue | 110 | 3329.34 | 3359.34 | 3548.51 |
| 2 | Assigned Revenues & Compensations | 120 | 566.20 | 712.30 | 805.00 |
| 3 | Rental Income from Municipal Properties | 130 | 1492.80 | 389.04 | 1405.12 |
| 4 | Fees & User Charges | 140 | 922.55 | 1185.77 | 1453.65 |
| 5 | Sale & Hire Charges | 150 | 113.80 | 37.00 | 51.00 |
| 6 | Revenue Grants, Contribution and Subsidies | 160 | 8310.00 | 8995.00 | 9775.00 |
| 7 | Income from Investments | 170 | 1000.15 | 900.41 | 1000.30 |
| 8 | Interest Earned | 171 | 500.00 | 550.00 | 650.00 |
| 9 | Other Income | 180 | 35.00 | 32.00 | 10.00 |
| 10 | Earmarked Funds | 311 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **16269.84** | **16160.86** | **18698.58** |
| | **Receipts (Capital)** | | | | |
| 11 | Grants, Contribution for specific purposes | 320 | 31196.50 | 24389.36 | 33801.20 |
| 12 | Secured Loans | 330 | 0.00 | 0.00 | 0.00 |
| 13 | Unsecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **31196.50** | **24389.36** | **33801.20** |
| | **Total Receipts** | | **47466.34** | **40550.22** | **52499.78** |

# VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2024-2025 AND BUDGET ESTIMATE 2025-2026
## REVENUE FUND & CAPITAL FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-2025 | Budget Estimate 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | **Payments (Revenue)** | | | | |
| 14 | Establishment Expenses | 210 | 9847.15 | 11062.27 | 12211.06 |
| 15 | Administrative Expenses | 220 | 1057.50 | 690.13 | 795.77 |
| 16 | Operations & Maintenance | 230 | 2477.50 | 2200.59 | 3051.50 |
| 17 | Interest & Finance Charges | 240 | 14.17 | 16.15 | 18.18 |
| 18 | Programme Expenses | 250 | 6.00 | 6.00 | 102.50 |
| 19 | Grants, Contribution and Subsidies | 260 | 13.00 | 18.00 | 20.50 |
| 20 | Other Liabilities | 350 | 3866.50 | 3646.67 | 9976.47 |
| | **Total** | | **17281.82** | **17639.81** | **26175.98** |
| | **Payments (Capital)** | | | | |
| 21 | Other Liabilities | 350 | 626.00 | 150.00 | 400.00 |
| 22 | Grants, Contribution and Subsidies | 260 | 13.00 | 18.00 | 20.50 |
| 23 | Repayment of Secured Loans | 330 | 25.00 | 16.00 | 18.00 |
| 24 | Repayment of UnSecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| 25 | Accumulated Depreciation | 411 | 5137.32 | 5190.78 | 5233.89 |
| 26 | Fixed Assets | 410 | 21365.02 | 15856.70 | 18967.50 |
| 27 | Project in Progress Specific Grants | 412 | 2800.00 | 1500.00 | 1500.00 |
| 28 | Project in Progress Special funds | 412 | 100.00 | 100.00 | 100.00 |
| 29 | Loans, Advances and Deposits | 460 | 93.18 | 42.50 | 63.69 |
| | **Total** | | **30159.52** | **22873.98** | **26303.58** |
| | **Total Payments** | | **47441.34** | **40513.79** | **52479.56** |
| | **Surplus/(Deficit)** | | **25.00** | **36.43** | **20.22** |

# VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2024-2025 AND BUDGET ESTIMATE 2025-2026
## WATER SUPPLY AND DRAINAGE FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-2025 | Budget Estimate 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | **Receipts (Revenue)** | | **Rs.in Lakhs** | | |
| 1 | Tax Revenue | 110 | 1764.42 | 1867.18 | 1984.46 |
| 2 | Assigned Revenues & Compensations | 120 | 0.00 | 0.00 | 0.00 |
| 3 | Rental Income from Municipal Properties | 130 | 0.80 | 0.25 | 0.35 |
| 4 | Fees & User Charges | 140 | 2849.95 | 3041.60 | 5400.95 |
| 5 | Sale & Hire Charges | 150 | 0.00 | 0.00 | 0.00 |
| 6 | Revenue Grants, Contribution and Subsidies | 160 | 0.00 | 0.00 | 0.00 |
| 7 | Income from Investments | 170 | 6.64 | 25.00 | 650.00 |
| 8 | Interest Earned | 171 | 48.41 | 45.00 | 50.00 |
| 9 | Other Income | 180 | 0.20 | 0.30 | 0.30 |
| 10 | Earmarked Funds | 311 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **4670.42** | **4979.33** | **8086.06** |
| | **Receipts (Capital)** | | | | |
| 11 | Grants, Contribution for specific purposes | 320 | 25338.00 | 20585.74 | 21700.00 |
| 12 | Secured Loans | 330 | 1000.00 | 1200.00 | 3567.00 |
| 13 | Unsecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **26338.00** | **21785.74** | **25267.00** |
| | **Total Receipts** | | **31008.42** | **26765.07** | **33353.06** |

## VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2024-2025 AND BUDGET ESTIMATE 2025-2026

## WATER SUPPLY AND DRAINAGE FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-2025 | Budget Estimate 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | **Payments (Revenue)** | | | | |
| 14 | Establishment Expenses | 210 | 352.87 | 265.58 | 365.64 |
| 15 | Administrative Expenses | 220 | 5.00 | 5.00 | 20.00 |
| 16 | Operations & Maintenance | 230 | 3999.14 | 4930.40 | 6255.75 |
| 17 | Interest & Finance Charges | 240 | 365.10 | 383.16 | 387.19 |
| 18 | Programme Expenses | 250 | 5.00 | 5.00 | 7.50 |
| 19 | Other Liabilities | 350 | 2216.91 | 1494.91 | 1706.56 |
| | **Total** | | **6944.02** | **7084.05** | **8742.64** |
| | **Payments (Capital)** | | | | |
| 20 | Grants, Contribution and Subsidies | 260 | 467.00 | 400.00 | 400.00 |
| 21 | Repayment of Secured Loans | 330 | 76.56 | 140.00 | 180.00 |
| 22 | Repayment of UnSecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| 23 | Accumulated Depreciation | 411 | 1015.20 | 1025.36 | 1026.04 |
| 24 | Fixed Assets | 410 | 10951.45 | 13060.50 | 12440.00 |
| 25 | Project in Progress | 412 | 11000.00 | 4500.00 | 10000.00 |
| 26 | Loans, Advances and Deposits | 460 | 519.19 | 506.00 | 531.30 |
| | **Total** | | **24029.40** | **19631.86** | **24577.34** |
| | **Total Payments** | | **30973.42** | **26715.91** | **33319.98** |
| | **Surplus/(Deficit)** | | **35.00** | **49.16** | **33.08** |

# VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2024-2025 AND BUDGET ESTIMATE 2025-2026
## ELEMENTARY EDUCATION FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-2025 | Budget Estimate 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | **Receipts (Revenue)** | | **Rs.in Lakhs** | | |
| 1 | Tax Revenue | 110 | 817.36 | 864.83 | 917.58 |
| 2 | Assigned Revenues & Compensations | 120 | 0.00 | 0.00 | 0.00 |
| 3 | Rental Income from Municipal Properties | 130 | 0.00 | 0.00 | 0.00 |
| 4 | Fees & User Charges | 140 | 0.00 | 0.00 | 0.00 |
| 5 | Sale & Hire Charges | 150 | 0.00 | 0.00 | 0.00 |
| 6 | Revenue Grants, Contribution and Subsidies | 160 | 0.00 | 0.00 | 0.00 |
| 7 | Income from Investments | 170 | 0.00 | 0.00 | 0.00 |
| 8 | Interest Earned | 171 | 25.00 | 35.00 | 38.00 |
| 9 | Other Income | 180 | 0.00 | 0.00 | 0.00 |
| 10 | Earmarked Funds | 311 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **842.36** | **899.83** | **955.58** |
| | **Receipts (Capital)** | | | | |
| 11 | Grants, Contribution for specific purposes | 320 | 100.00 | 250.00 | 100.00 |
| 12 | Secured Loans | 330 | 0.00 | 0.00 | 0.00 |
| 13 | Unsecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **100.00** | **250.00** | **100.00** |
| | **Total Receipts** | | **942.36** | **1149.83** | **1055.58** |

## VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2024-2025 AND BUDGET ESTIMATE 2025-2026

### ELEMENTARY EDUCATION FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2024-2025 | Revised Estimate 2024-2025 | Budget Estimate 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | **Payments (Revenue)** | | | | |
| 14 | Establishment Expenses | 210 | 25.00 | 22.00 | 25.00 |
| 15 | Administrative Expenses | 220 | 16.50 | 14.25 | 24.00 |
| 16 | Operations & Maintenance | 230 | 140.00 | 90.00 | 135.00 |
| 17 | Interest & Finance Charges | 240 | 0.03 | 0.03 | 0.03 |
| 18 | Programme Expenses | 250 | 0.00 | 0.00 | 0.00 |
| 19 | Other Liabilities | 350 | 61.00 | 45.75 | 61.50 |
| | **Total** | | **242.53** | **172.03** | **245.53** |
| | **Payments (Capital)** | | | | |
| 20 | Grants, Contribution and Subsidies | 260 | 0.00 | 0.00 | 0.00 |
| 21 | Repayment of Secured Loans | 330 | 0.00 | 0.00 | 0.00 |
| 22 | Repayment of UnSecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| 23 | Accumulated Depreciation | 411 | 95.00 | 97.30 | 99.60 |
| 24 | Fixed Assets | 410 | 225.00 | 352.00 | 355.00 |
| 25 | Project in Progress | 412 | 255.00 | 415.33 | 250.00 |
| 26 | Loans, Advances and Deposits | 460 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **575.00** | **864.63** | **704.60** |
| | **Total Payments** | | **817.53** | **1036.66** | **950.13** |
| | **Surplus/(Deficit)** | | **124.83** | **113.17** | **105.45** |